ආර්ථික සංවර්ධනය සහ අන්තර්ජාතික සබඳතා පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව
වෙත යොමු කරන ලද
2023 හා 2024 වර්ෂ සඳහා කර්මාන්ත සහ ව්‍යවසායකත්ව සංවර්ධන අමාත්‍යාංශයෙහි
වාර්ෂික කාර්ය සාධන වාර්තා
2021, 2022 හා 2023 වර්ෂ සඳහා ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලයේ වාර්ෂික වාර්තා
2022 හා 2023 වර්ෂ සඳහා ජාතික මැණික් හා ස්වර්ණාභරණ අධිකාරියෙහි වාර්ෂික වාර්තා
2023 වර්ෂය සඳහා මැණික් හා ස්වර්ණාභරණ පර්යේෂණ හා අභ්‍යාස ආයතනයේ වාර්ෂික වාර්තාව
2021/2022 සහ 2022/2023 වර්ෂ සඳහා බී සී සී ලංකා ලිමිටඩ් ආයතනයෙහි වාර්ෂික වාර්තා
2021/2022 සහ 2022/2023 වර්ෂ සඳහා ජාතික ලුණු සමාගමෙහි වාර්ෂික වාර්තා සහ ගිණුම් සම්බන්ධයෙන්
ආර්ථික සංවර්ධනය සහ අන්තර්ජාතික සබඳතා පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව

පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ
ආර්ථික සංවර්ධනය සහ අන්තර්ජාතික සබඳතා පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති
ගරු නීතිඥ ලක්මාලි හේමචන්ද්‍ර මෙනෙවිය, පා.ම. විසිනි
2025 ඔක්තෝබර් මස 07 වැනි අඟහරුවාදා

---

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக்
குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட
2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை
அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்
2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின்
வருடாந்த அறிக்கைகள்
2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார
சபையின் வருடாந்த அறிக்கைகள்
2023 ஆம் ஆண்டுக்கான இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின்
வருடாந்த அறிக்கை
2021/2022 மற்றும் 2022/2023 ஆண்டுகளுக்கான பீ.சீ.சீ. லங்கா லிமிடெட்
நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைகள்
2021/2022 மற்றும் 2022/2023 ஆண்டுகளுக்கான தேசிய உப்புக் கம்பெனியின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்குகள்
பற்றிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள்
பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கை

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய
துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளரான
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (சட்டத்தரணி) செல்வி லக்மாலி ஹேமசந்திர
அவர்களால் 2025 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று
பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

---

Report of the
Sectoral Oversight Committee on Economic Development and International Relations
on
Annual Performance Reports of the Ministry of Industry and Entrepreneurship Development for the Years 2023 and 2024
Annual Reports of the Sri Lanka Export Development Board for the Years 2021, 2022 and 2023
Annual Reports of the National Gem and Jewellery Authority for the Years 2022 and 2023
Annual Report of the Gem and Jewellery Research and Training Institute for 2023
Annual Reports of BCC Lanka Limited for the Years 2021/2022 and 2022/2023
The Annual Reports and Accounts of the National Salt Limited for the Years 2021/2022 and 2022/2023,
referred to
Sectoral Oversight Committee on Economic Development and International Relations

Presented to Parliament by
Hon. Lakmali Hemachandra, Attorney at Law, M.P.,

Chair of the
Sectoral Oversight Committee on on Economic Development and International Relations
on Tuesday 7$^{th}$ October 2025

குழுவின் அறிக்கை

2025 ஓகத்து 20 ஆந் திகதி பாராளுமன்றத்தில் கூடிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவால் பின்வரும் செயலாற்றுகைகள் / வருடாந்த அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன.

- **2024 ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை** (2025.07.09 ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2023 ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை** (2024.06.18 ஆந் திகதி தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீக திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பின்னர், 2025.03.15ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பத்தாவது பாராளுமன்றத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

- **2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை** (2025.05.20ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2022ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை** (2024.08.21ஆந் திகதி தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பின்னர், 2025.03.15 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பத்தாவது பாராளுமன்றத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

- **2021 ஆம் ஆண்டிற்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை** (2023.08.09 ஆந் திகதி தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பின்னர், 2025.03.15ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பத்தாவது பாராளுமன்றத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

- **2023 ஆம் ஆண்டிற்கான தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் வருடாந்த அறிக்கை** (2025.03.05ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2022 ஆம் ஆண்டிற்கான தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் வருடாந்த அறிக்கை** (2024.03.20ஆந் திகதி பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பின்னர், 2025.03.15ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற பொது அலுவல்கள் பற்றிய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பத்தாவது பாராளுமன்றத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

- **2023 ஆம் ஆண்டிற்கான இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை** (2025.03.14ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2021/2022 ஆம் ஆண்டிற்கான பீ.சீ.சீ.லங்கா லிமிடெட் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை** (2025.07.24ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2022/2023 ஆம் ஆண்டிற்கான பீ.சீ.சீ.லங்கா லிமிடெட் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை** (2025.06.03ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2022/2023 ஆம் ஆண்டிற்கான தேசிய உப்புக் கம்பெனியின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்** (2025.07.24ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2021/2022 ஆம் ஆண்டிற்கான தேசிய உப்புக் கம்பெனியின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்** (2025.07.24 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.)

**பங்கேற்ற குழு அங்கத்துவ உறுப்பினர்கள்:**

கௌரவ சட்டத்தரணி செல்வி லக்மாலி ஹேமசந்திர, பா.உ. (தவிசாளர்)

கௌரவ சட்டத்தரணி அனுராத ஜயரத்ன, பா.உ.

கௌரவ சிவஞானம் சிறீதரன், பா.உ.

கௌரவ சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி, பா.உ.

கௌரவ கந்தசாமி பிரபு, பா.உ.

கௌரவ விஜேசிறி பஸ்நாயக்க, பா.உ.

கௌரவ சுரங்க ரத்நாயக்க, பா.உ.

கௌரவ திலிண சமரகோன், பா.உ.

**<u>பங்கேற்ற குழு அங்கத்தவரல்லாத உறுப்பினர்கள்:</u>**

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி, பா.உ., கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்
கௌரவ சதுரங்க அபேசிங்ஹ, பா.உ., கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**<u>குழுவின் செயலாளர்</u>**

திருமதி. சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)

**<u>பங்கேற்ற அலுவலர்கள்</u>**

**<u>கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு</u>**

திருமதி. ஜே.எம். திலகா ஜயசுந்தர ,செயலாளர்
திருமதி. சுபாஷினி குலதுங்க முதலி, மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
திரு. பீ.சுசந்த ஜயதிலக்க, மேலதிக செயலாளர் (அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் மற்றும் மறுசீரமைப்பு)
திருமதி. எஸ்.டப்லியு.சீ.ஜயமினி,மேலதிகச் செயலாளர்
திரு. டீ.டப்லியு. கயான்,சிரேஷ்ட உதவிச் செயலாளர்
திரு. கே.ஏ.பந்துல குருப்பு, பிரதம நிதி அலுவலர்
திருமதி. ஐ.எம்.பீ.குணரத்ன, பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)
திரு. டீ.பி.என்.விஜேசிறி, பணிப்பாளர் நாயகம் (பொறியியலாளர்)
திரு. டீ.ஜீ.பீ.முனிதாச, பணிப்பாளர் (திட்டமிடல்)
திரு. என்.சீ. ஜயத்ன, உதவிப் பணிப்பாளர் (அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள்)
திரு. தசுன் ராஜபக்ஷ, பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி)
திருமதி. பீ.ஏ.டீ.என்.பிரசாதிகா, பணிப்பாளர்

**<u>பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு</u>**

திருமதி. எம்.பீ.கே. ஜயதுங்க , பிரதம கணக்காளர்
திருமதி. எச்.வெலகெதர, பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
திருமதி. பூர்ணிமா என். விக்கிரமரத்ன, சிரேஷ்ட உதவிச் செயலாளர்
திரு. விபுல ஜயசேக்கர, பணிப்பாளர் (திட்டமிடல்)

**<u>தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரச் சபை</u>**

திருமதி. எச்.என்.கே.டீ. துலானி, பணிப்பாளர் நாயகம்
திரு. ஜீ.டப். அமரசிறி, பணிப்பாளர் (சுரங்க அகழ்வு மற்றும் சூழல்)
திரு. டீ.எம்.ஏ.பீ.கே. தென்னகோன், பணிப்பாளர் (ஏற்றுமதி சேவைகள் மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல்)
திரு. டப்.ஜீ. நுவன் மலிந்த , பணிப்பாளர் (நிதி)
திரு. பீ.கே. விஜேதுங்க ,உள்ளகக் கணக்காய்வாளர் (பிரதிப் பணிப்பாளர்)
செல்வி. ஜீ.ஏ.யூ.பீ. அபேபால, பிரதிப் பணிப்பாளர் (சுரங்க அகழ்வு ம ற்றும் சூழல்)
திரு. எம்.எல்.ஐ.எம்.ஆர். அருண, உதவிப் பணிப்பாளர் (அமுல்படுத்தல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி)

**<u>இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்</u>**

பேராசிரியர் திரு. ஜீ.டப்.ஏ.ரொஹான் பிரனாந்து, தவிசாளர்
திரு. பீ.ஜீ.ஆர்.டப்லியு. கம்லத் ,பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி)
திரு. ஆர்.எம்.என்.பீ.கே. ஜயசிங்ஹ, ப.க. பணிப்பாளர் (ஆராய்ச்சி)
திரு. சஜித் முஹன்திரம், பிரதிப் பணிப்பாளர் (நிதி)/ப.க. (நிருவாகம் மற்றும் மனித வளம் )

**<u>இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை</u>**

திரு. மங்கல விஜேசிங்ஹ, தவிசாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி
திருமதி.ஒ.எம்.சீ.குமுதினி முதலிகே, பணிப்பாளர் (கொள்கைகள் மற்றும் மூலோபாயத் திட்டமிடல்)
திரு. குசல் டீ. பெரேரா, பணிப்பாளர் (நிதி)
திருமதி.தேவி.தக்ஷிலா விஜேரத்ன, பணிப்பாளர் (சட்டம்)
திருமதி. ரிகா கபூர், பணிப்பாளர் ( மனிதவள முகாமைத்துவம்)
திரு. தக்ஷில ஹெட்டிஆரச்சி, உள்ளக கணக்காய்வாளர்

**<u>பீ.சீ.சீ.லங்கா லிமிடெட்</u>**

திரு. பீ.ஐ.பெரேரா, தவிசாளர்
திரு. எஸ்.எம்.சீ.டப்லியு.ரன்ஜன் ,பொது முகாமையாளர்
திரு. ஈ.ஏ.சீ.சம்பத், உதவி உள்ளகக் கணக்காய்வாளர்
திரு. டீ.டீ.எல்.டீ. சேனாரத்ன, கணக்கு உதவியாளர்

**தேசிய உப்புக் கம்பெனி**

திரு. கயான் வெல்லால, தவிசாளர்

திரு. எம்.ஜே.டீ. மன்சீல், பொது முகாமையாளர்

திரு. எம்.ஐ.எம். இர்ஷான், முகாமையாளர் (கிரயக் கணக்கீடு)

**2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றகை அறிக்கை**

**அறிமுகம்**

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு, 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம், 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டம் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரச் சபை சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பையும், கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கான பொறுப்பையும் வகிக்கின்றது. கைத்தொழில் பல்வகைமை ஊடாக உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச விநியோக வலையமைப்புடன் இணைந்து, சர்வதேச போட்டிச் சூழலில் ஒப்பீட்டளவிலான இலாபத்தை ஈட்டுவதற்காக உள்நாட்டு கைத்தொழில் துறையை புதிய மூலோபாயங்கள் ஊடாக பலப்படுத்துவதும், மேம்படுத்துவதும் இவ்வமைச்சின் விடயப்பரப்பாவதுடன், பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களும் 34 அரச கூட்டுத்தாபனங்களும் இவ்வமைச்சின் கீழ் இயங்குகின்றன.

**குழுவின் அவதானிப்புக்கள்**

- சர்வதேச நடைமுறையின் பிரகாரம், நாடொன்றில் பயன்படுத்தப்படும் மொத்த நிலப்பரப்பில் 3% ஆன நிலப்பரப்பு கைத்தொழில் துறைக்காக ஒதுக்கப்படவேண்டும் எனினும், இலங்கையில் 0.01%ஆன நிலப்பரப்பு மாத்திரமே கைத்தொழில் துறைக்காக ஒதுக்கப்பட்டிருப்பதால், கைத்தொழில் துறைக்கு காணிகளை ஒதுக்குவதற்கான புதிய கொள்கையொன்றை வகுக்க வேண்டியமை

- கைத்தொழிலுக்காக காணிகளை குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைமுறையில் யாதேனும் கைத்தொழிலொன்று நட்டமடையும் நிலையை எதிர் நோக்கினால், அக்கைத்தொழிலாளரை நீக்குவதற்கான இயலுமை இன்மையால், காணியொன்றை குத்தகைக்கு வழங்கிய பின்னர், அக்குத்தகையை இரத்துச்செய்வதற்கான அதிகாரம் அமைச்சு வசம் காணப்படவேண்டியமை
- கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான முதலீட்டு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக புதிய கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டும் எனவும், காணிப் பயன்பாடு தொடர்பான சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் எனவும், தேசிய பௌதீகத் திட்டமிடலுக்கு, தேசிய காணி கொள்கையையும் உள்வாங்கி அதனை வலுவூட்ட வேண்டியமை

கலந்துரையாடப்பட்ட பின்னர், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாற்றுகை அறிக்கைகளுக்கு குழு இணங்கியதுடன், அவ்வறிக்கைகளையும் அங்கீகரித்தது.

**2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை**

**அறிமுகம்**

ஏற்றுமதியை அபிவிருத்திச் செய்யும் மற்றும் மேம்படுத்தும் முன்னணி நிறுவனமான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய ஏற்றுமதி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக புதிய மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தும்போது தமது பொறுப்புக்களை நிறைவேற்றுதற்காக ஆலோசகர், மேற்பார்வையாளர், ஊக்குவிப்பாளர், வசதிகளை வழங்குனர் மற்றும் அறிவுத் தொகுப்பாளர் என்ற வகையில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செயற்படுகின்றது.

**குழுவின் அவதானிப்புக்கள்**

- புதிய ஏற்றுமதியாளர்களை அடையாளங் காண்பதற்காக அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களினதும் பங்களிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் அபிவிருத்தியின் ஊடாக ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கான பங்களிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும்.
- அதிக ஏற்றுமதி ஆற்றுலுடைய தகவல் தொழில்நுட்பம், உணவு மற்றும் பானங்கள், வாசனைத் திரவியங்கள் ஆகிய துறைகளில் புதிய பரிணாமங்களை இணங்கண்டு அபிவிருத்திச் செய்தல், சந்தைப் பல்வகைமைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டுக் குழுவொன்றை அமைத்து, அதனை வலுவூட்ட வேண்டும்.

- அபிவிருத்தி இலக்குகளை அடையும் பொருட்டு புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுப்பதன் மூலம் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் செயலாற்றுகை இலக்குகளை வழங்குதல் மற்றும் செயலாற்றுகையை நிர்ணயிப்பதற்காக முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை தயாரிக்க வேண்டும்.

- கைத்தொழில் வலயங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், இறக்குமதி செய்து மீளத் தயாரிக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தல் மற்றும் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும்போது வரிச்சலுகை வழங்கப்பட வேண்டும்.

கலந்துரையாடப்பட்ட பின்னர், 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கைகளுக்கு குழு இணங்கியதுடன், அவ்வறிக்கைகளை அங்கீகரித்தது.

**2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரச் சபையின் வருடாந்த அறிக்கைகள்**

**அறிமுகம்**

1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை சட்டத்தின் கீழ் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கு, அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு அதிகாரம் கொண்ட அரச நிறுவனமாக இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை நிறுவப்பட்டுள்ளது. இந்த அதிகாரச் சபை, இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலுக்குத் தேவையான சந்தையை விரிவுபடுத்தல், கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து பிரிவுகளையும் சார்ந்த ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சிகளை மேம்படுத்தல், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை விற்பனை செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வைத் தடுத்தல் போன்ற ஏராளமான பணிகளை ஆற்றுகின்றது.

**குழுவின் அவதானிப்புக்கள்**

- அரசாங்கத்திற்கு உரித்தாக வேண்டிய வருமானம், சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு மூலம் வேறு நபர்களுக்கு கிடைக்கப் பெறுவதானது இரத்தினக்கல் கைத்தொழில் துறையில் காணப்படும் பாரிய பிரச்சினையாகும்.

- சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வை ஒழுங்குறுத்துவதற்கு புதிய சட்ட விதிகளை வகுக்க வேண்டும் என்பதுடன் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைச் சட்டத்தை திருத்துவதன் மூலம் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரச் சபைக்குத் தேவையான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

கலந்துரையாடப்பட்ட பின்னர், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் வருடாந்த அறிக்கைகளுக்கு குழு இணங்கியதுடன், அவ்வறிக்கைகளையும் அங்கீகரித்தது.

**2023 ஆம் ஆண்டிற்கான இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை**

**அறிமுகம்**

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைச் சட்டத்தின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காகவும், நிலைபேறான அபிவிருத்திக்காகவும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளை வழங்கும் பொருட்டு இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இரத்தினக்கல் வளம் நிறைந்த பிரதேசங்கள் தொடர்பாக ஆராய்சிகளை மேற்கொண்டு, நிலைபேறான வகையில் அவற்றை அகழ்தல் மற்றும் நவீன தொழிநுட்ப அறிவு, தேர்ச்சி மற்றும் திறன்களைக்கொண்ட ஊழியப்படையை உருவாக்குவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வதே இந்நிறுவனத்தின் குறிக்கோள்களாகும்.

**குழுவின் அவதானிப்புக்கள்**

- இலங்கையில் இரத்தினக்கற்கள் கிடைப்பதற்கு சாத்தியமுடைய பிரதேசங்களை வரைப்படமாக்கும் செயற்பாடு 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு, இது வரையில் சுமார் 20 வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இரத்தினக்கற்கள் கிடைப்பதற்கு சாத்தியப்பாடுடைய பிரதேசங்கள் என அடையாளங் காணப்பட்டுள்ள காணிகளில் 50% ஆனவை தோட்டக்கம்பனிகளின் வசமுள்ள காணிகளாகும்.

- நிலைபேறான இரத்தினக்கல் அகழ்வு எண்ணக்கருவை மேம்படுத்துவதற்காக இன்றளவில் திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் இரத்தினக்கல் வியாபாரிகள் தங்களுக்கு கிடைக்கின்ற பெறுமதி கூடிய இரத்திக்கற்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்த தயங்குகின்றமை அதற்கான தடையாகும்.

கலந்துரையாடிய பின்னர், 2023 ஆம் ஆண்டுக்கான இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைக்கு குழு இணங்கியதுடன், அவ்வறிக்கையை அங்கீகரித்தது.

**2021/2022 மற்றும் 2022/ 2023 ஆம் ஆண்டுகளுக்கான பீ.சீ.சீ லங்கா லிமிடெட் கம்பெனியின் வருடாந்த அறிக்கைகள்**

**அறிமுகம்**

பீ.சீ.சீ. லங்கா லிமிடெட் கம்பெனி, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனங்களை அல்லது அரசுக்குடமையான வியாபார முயற்சிகளை அரச கம்பெனிகளாக மாற்றும் சட்டத்தின் கீழ் 1988.11.04ஆந் திகதி அரச கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது. பிரதானமாக தேங்காய் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சவர்க்கார தொழிற்சாலையுடன் கூடிய இந்நிறுவனத்தால் தேங்காய் எண்ணெய் , சவர்க்கார வகைகள், கிருமிநாசினிகள் மற்றும் மாசு நீக்கிகள் உற்பத்திச் செய்யப்படுகின்றன.

**குழுவின் அவதானிப்புக்கள்**

- இந்நிறுவனம், எந்தவொரு இரசாயனப் பதார்த்தத்தையும் கலக்காமல் உயர் தர தேங்காய் எண்ணெயை உற்பத்திச் செய்கின்ற போதிலும் தமது உற்பத்திகளுக்காக தரச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கு இந்நிறுவனத்தின் முகாமைத்துவத்தால் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை மற்றும் அதற்காக 2025ஆம் ஆண்டு விண்ணப்பித்துள்ளமை
- 2002 ஆம் ஆண்டு இலாபம் ஈட்டாத நிறுவனம் என்ற அடிப்படையில் மூடப்பட்டிருந்த பீ.சீ.சீ. லங்கா லிமிடெட் நிறுவனமானது, 2014ஆம் ஆண்டு முதல் மீண்டும் படிப்படியாக இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாறியுள்ளதுடன் இன்றளவில் புதிய கைத்தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளமை

கலந்துரையாடிய பின்னர், 2021/2022 மற்றும் 2022/2023ஆம் ஆண்டுகளுக்கான பீ.சீ.சீ. லங்கா லிமிடெட் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைகளுக்கு குழு இணங்கியதுடன், அவ்றிக்கைகளையும் அங்கீகரித்தது.

**2021/2022 மற்றும் 2022/2023 ஆண்டுகளுக்கான தேசிய உப்புக் கம்பெனியின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்குகள்**

**அறிமுகம்**

1938 ஆம் ஆண்டு உப்புத் திணைக்களம் எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பெனி, 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கம்பெனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கம்பெனியால் சாதாரண உப்பு, அயடீன் கலந்த உப்பு, தூள் உப்பு மற்றும் கைத்தொழில் உப்பு ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றன. தேசிய உப்புக் கம்பெனியின் பிரதான உற்பத்தி பிரதேசங்கள் மன்னார் மற்றும் ஆனையிறவில் அமைந்துள்ளதோடு, நிர்வாக அலுவலகம் கொழும்பில் அமைந்துள்ளது. உப்பளங்களை செயற்படுத்தல், உப்பு உற்பத்தி, பெறுமதி சேர்த்தல், உப்பு மற்றும் உப உற்பத்திளை விற்பனைச் செய்தல் என்பன தேசிய உப்புக் கம்பெனியின் பணிகளாகும்.

**குழுவின் அவதானிப்புக்கள்**

- நாட்டின் வருடாந்த உப்புத் தேவையினை பூர்த்திச் செய்யும் கொள்திறனானது தற்போது நடாத்திச் செல்லப்படும் உப்பளங்களில் தங்கியிருப்பதாகவும் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை மழைவீழ்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களால் உப்பு உற்பத்தி வீழ்ச்சி அடைந்தமையால் 2024ஆம் ஆண்டு உப்புத் தட்டுப்பாட்டிற்கு முகங் கொடுக்க நேரிட்டமை
- உப்பு உற்பத்தியின்போது, இயற்கையாக ஆவியாகும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேலதிகமாக செயற்கை முறையொன்றைப் பயன்படுத்தி உப்பு உற்பத்தி செய்வதானது உப்பு இறக்குமதி செய்வதிலும் பாரக்க இலாபமானதாகும்.
- இன்றளவில் உப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்காக தேசிய உப்புக் கம்பெனிகளுக்குரிய உப்பளங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திச் செய்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை

கலந்துரையாடிய பின்னர், 2021/2022 மற்றும் 2022/2023 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய உப்புக் கம்பெனியின் வருடாந்த அறிக்கைகளுக்கு குழு இணங்கியதுடன், அவ்றிக்கைகளையும் அங்கீகரித்தது.

**குழுவின் தீர்மானங்கள்**

பரிசீலித்ததன் பின்னர், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு, பாராளுமன்றத்தால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மேற்படி செயலாற்றுகைகள் / வருடாந்த அறிக்கைகளுக்கு இணங்கியதோடு, அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட குழுவின் இவ்வறிக்கையை குழுவின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி செல்வி லக்மாலி ஹேமசந்திர அவர்கள் 2025 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று பாராளுமன்றத்திற்குச் சமரப்பிக்க வேண்டும் என தீர்மானித்தது.